(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2024

| | | |
|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours 10 Min | 21 T II |
| | Gr. 12 (2024) | |

### பகுதி – I

❖ **பகுதி I இல் கட்டாயமான இருபது வினாக்கள் உண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் கீழே ஐந்து விடைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று மட்டுமே சரியானது. அவ் விடையினைத் தெரிவு செய்து அவ்விடை இலக்கத்தினை புள்ளடித்தாளில் (✕) அடையாளமிடுக.**

01) பொருளாதாரப்பிரச்சினைக்கு அடிப்படையாக அமைவது தெரிவு ஆகும். ஏனெனில்,
   (1) சமமற்ற வருமானப் பங்கீடு இடம்பெறல்
   (2) பெரும்பாலான வளங்கள் அருமையாகக் காணப்படல்.
   (3) பெரும்பாலான வளங்கள் எல்லையற்றவையாக இருத்தல்.
   (4) மனித விரும்பங்கள் அவர்களின் தேவைகளைவிட அதிகமாக இருத்தல்.
   (5) மனித விரும்பங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.


02) பொருளியலாளர்கள் கருதுகோள்களை முன்வைத்து ஆதாரங்களைச் சேகரித்து, பரிசோதித்து கருதுகோள்களை ஏற்றுக்கொண்டு விருத்தி செய்தல் அல்லது நிராகரித்தல் என்பது பின்வரும் எதற்கு உதாரணமாக அமையும்.
   (1) ஒரு பேரினப் பொருளாதாரக் கூற்றிற்கு
   (2) ஒரு நேர்க் கொள்கைப் பொருளாதாரக் கூற்றுக்கு.
   (3) பொருளாதார முறையியலுக்கு.
   (4) பொருளாதார தீர்மானம் எடுத்தலுக்கு
   (5) ஒரு நியமக் கொள்கைப் பொருளாதாரக் கூற்றுக்கு.

03) விலைப் பொறிமுறையானது வளங்களை ஒதுக்கீடு செய்வது,
   (1) சந்தையில் மிகை நிரம்பல் காணப்படும் போது விலைகளை அதிகரிக்கச் செய்யும்
   (2) சந்தைக்கு தனியுரிமை சக்தியை வழங்குவதுடன் சமநிலை விலைக்கு மேலாக நுகர்வோருக்குப் பொருட்களை வழங்குதல்.
   (3) பொருட்களை தமது சமூகச் செலவைக்காட்டிலும் குறைந்த அமையச்செலவில் உற்பத்தி செய்வதனை உறுதிப்படுத்தல்.
   (4) சந்தையில் நிலவும் சார்புவிலைகளின் அடிப்படையில் உற்பத்திக்குத் தேவையான காரணிகளின் அளவினைத் தீர்மானித்து ஒவ்வொரு உற்பத்திக்கும் வளங்களை ஒதுக்கீடு செய்வது.
   (5) பொருட்களின் விலையைக் காட்டிலும் பொருளின் எல்லைச்செலவு குறைவாக அமைவதனை உறுதிப்படுத்தல்.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

04) மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வளையி வருமாறு.

மூலதனப் பொருட்களை **ஒரு அலகு** மேலதிகமாக உற்பத்தி செய்யும் போது அமையச்செலவு




(1) Y இனைக் காட்டிலும் X இல் அதிகம்.

(2) Y இனைக் காட்டிலும் Z இல் அதிகம்.

(3) X மற்றும் Y இல் சமன்

(4) X, Y மற்றும் Z இல் சமன்

(5) 300 அலகுகள் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் போது பூச்சியம் ஆகும்.

05) கொக்கோவுக்கான கேள்வியும் சொக்கலட்டிற்கான (chocolate) கேள்வியிம் வருவிக்கப்பட்ட கேள்வியாகும் (derived demand) சொக்கலட்டிற்கான கேள்வி குறைவடையுமாயின் பின்வருவனவற்றுள் எது பெரும்பாலும் சாத்தியமானது.

(1) கொக்கோவின் கேள்விக்கோட்டின் வழியான அசைவு ஏற்படும்.

(2) கொக்கோவின் நிரம்பல் கோட்டின் வழியான அசைவு ஏற்படும்.

(3) கொக்கோவின் நிரம்பல் கோட்டில் அசைவு ஏற்படும்.

(4) கொக்கோவின் கேள்விக்கோட்டில் வலதுபுறம் அசைவு ஏற்படும்.

(5) கொக்கோவின் நிரம்பல்கோட்டில் வலதுபுறம் அல்லது இடதுபுறம் அசைவு ஏற்படும்.

06) குறித்த பண்டத்தின் கேள்விக் கோடு வருமாறு விலை ரூபா *30* திலிருந்து ரூபா *25* ஆக குறையுமாயின் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் எது மிகவும் சரியானது


(1) பண்டத்தின் கேள்வி நெகிழ்வுள்ளது.

(2) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி *-0.5*

(3) நிறுவனத்தின் மொத்த வருமானம் அதிகரிக்கும்

(4) நிறுவனத்தின் மொத்த வருமானம் மாற்றமடையாது.

(5) நிறுவனத்தின் மொத்த வருமானம் குறைவடையும்.





(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)


07) அரிசிக்கும் கோதுமைக்குமான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி நேர்க்கணியமாகக் காணப்படுகின்றது எனின் அரிசியும் கோதுமையும்.


(1) இழிவுப் பண்டங்கள் (2) இணைப்புப்பண்டங்கள்
(3) சாதாரண பண்டங்கள் (4) பதிலீட்டுப்பண்டங்கள்
(5) வெப்லன் பண்டங்கள்


08) சில பொருட்களுக்கான நிரம்பல் வளையிகள் வருமாறு கீழே தரப்படும் எந்த நிரம்பல் கோட்டின் வழியே விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடையும்.

(1)



(2)



(3)



(4)



(5)



09) சந்தை சமனின்மை காரணமாக நிரம்பல் கோடு இடதுபுறம் நோக்கி நகர்வடைகின்றது.இதனால் ஆரம்பத்தில் சமநிலையில் காணப்பட்ட புள்ளியில்


(1) நுகர்வோர் தாம் விரும்பிய அளவினைக் கொள்வனவு செய்வதில் பற்றாக்குறை ஏற்படும்.
(2) நுகர்வோர் தொடர்ந்து **ஒரே அளவினைக்** கொள்வனவு செய்ய விரும்பமாட்டார்கள்
(3) நிறுவனம் அதிகளவு நிரம்பலை செயய விரும்பும்.
(4) நிறுவனத்தின் அனுபவத்தின் அடிப்படையில் அதிக இருப்பினைப் பேண விரும்பும்.
(5) நுகர்வோர் தொடர்ந்து **சமவிலையில் சமஅளவினைக்** கொள்வனவு செய்ய விரும்பமாட்டார்கள்

10) கச்சான் பருப்பு பையின் அலகு ஒன்றின் விலை 120 ரூபாவாக காணப்பட்ட போது வாராந்தம் 20000 அலகுகள் விற்பனை செய்யப்படுகின்றது. அரசு கச்சான் பருப்பு பையின் மீது சிறப்பு வரியாக ரூபா 15 ஐ அலகு ஒன்றிற்கு விதித்தது. இதனால் விற்பனை அலகு 16000 அலகுகளானதுடன் விற்பனை விலை 130 ரூபாவாக உயர்வடைந்தது. இச் செயற்பாட்டால் உற்த்தியாளரால் வாராந்தம் செலுத்தும் அவருக்குரிய வரியின் மொத்த அளவு யாது?

(1) ரூபா.80, 000 (2) ரூபா.100, 000 (3) ரூபா.160, 000
(4) ரூபா.200, 000 (5) ரூபா.240, 000

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

11) கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் DD கேள்விக்கோட்டினையும் S மற்றும் Ss நிரம்பல் மற்றும் சிறப்பு மானியத்திற்குப் பின்னரான நிரம்பல் கோட்டினையும் குறித்து நிற்கின்றது.




கீழே தரப்பட்டுள்ளவற்றுள் சரியானது,

| | மானியத்திற்கு முன் சமூகமிகைப் பிரதேசம் | மானியத்திற்கு பின் சமூகமிகைப் பிரதேசம் |
|---|---|---|
| (1) | A B E H | A B C E F G H |
| (2) | A B E F | H I J |
| (3) | A B E F G | H E |
| (4) | A B E F G | H E B |
| (5) | A B E F G | H E B C |

12) சமநிலைவிலைக்குக் கீழாக ஒரு கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்படுமாயின் அதன் விளைவாக பின்வருவனவற்றுள் எது ஏற்படும்.
(1) மிகைநிரம்பல் (2) ஒரு சமநிலைவிலை (3) நிரம்பலில் ஒரு அதிகரிப்பு
(4) மிகைக்கேள்வி (5) கேள்வியில் ஒரு குறைவு.

13) ஒரு நிறுவனம் சாதாரணமாக குறுங்காலத்தில் நிலையான செலவுகளையும் மாறுஞ்செலவுகளையும் கொண்டதாகக் காணப்படினும் நீண்ட காலத்தில்
(1) அனைத்துச் செலவுகளும் நிலையான செலவாக மாற்றமடையும்.
(2) நிலையான செலவுகள் மாறுஞ்செலவுகளாக மாறும்
(3) நிலையான செலவுகள் மிகக்குறைந்தளவு ஏற்படும்
(4) நிலையான செலவுகள் மிக அதிகளவாக ஏற்படும்
(5) மாறுஞ்செலவுகள் நிலையான செலவுகளாக மாற்றம் அடையும்.

14) பின்வருவனவற்றுள் எது ஒரு சந்தையில் நுழைவதற்கான தடையினை அதிகரிப்தற்கு காரணமாக அமையும்.
(1) சிறிய நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்கல்
(2) உற்பத்தித் துறைகளுக்கிடையில் அதிகளவு ஊழிய அசைவு இடம்பெற அனுமதித்தல்
(3) புதிய தொழில்நுட்ப உள்வாங்கல் காரணமாக நிறுவனத்தின் அளவுத்திட்ட விளைவுகள் அதிகரித்து அளவுத்திட்ட சிக்கனங்கள் ஏற்படல்.
(4) ஏற்கனவே சந்தையில் இருக்கும் நிறுவனத்தின் விளம்பரச் செவுகள் குறைவடைதல்.
(5) குறைந்த இலாபம் உழைக்கும் நிறுவனங்களுக்கு மிகவும் குறைந்த வட்டி வீத்தில் கடன்களை வழங்குதல்.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

15) நிறைபோட்டிச்சந்தை நிலைமையில் இயங்கி நிரம்பல் செய்து கொண்டிருக்கும் பண்டம் ஒன்றின் சந்தை கேள்வி குறைவடைகின்றது. எனின் ஏனையவை மாறாத நிலையில் மேற்படி மாற்றம் காரணமாக நிறுவனத்தின் சராசரி வருமானம் மற்றும் எல்லை வருமானம் ஆகியவற்றிற்கு யாது நிகழும்,

(1) சராசரி வருமானமும் எல்லை வருமானமும் அதிகரிக்கும்.
(2) சராசரி வருமானமும் எல்லை வருமானமும் குறைவடையும்.
(3) சராசரி வருமானமும் எல்லை வருமானமும் மாற்றமடையாது.
(4) சராசரி வருமானம் குறைவடையும் எல்லைவருமானம் அதிகரிக்கும்.
(5) சராசரி வருமானம் அதிகரிக்கும் எல்லைவருமானம் குறைவடையும்.

16) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது ஒரு வருமான வட்டப்பாய்ச்சலில் ஒரு மெய்ப்பாய்ச்சல் ஆகும்.

(1) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்லுதல்.
(2) நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு உற்பத்திக்காரணிகள் செல்வது.
(3) வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்லுதல்.
(4) நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு காரணிக் கொடுப்பனவுகள் செல்வது.
(5) வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்துறைக்கு காரணிக் கொடுப்பனவுகள் செல்வது.

19) செலவு வழியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை மதிப்பீடு செய்யப்படும் போது சேர்க்கப்படும் பெறுதிகளைச் சரியாகக் காட்டுவது

(1) ஊழியருக்கான இழப்பீடு,மொத்த தொழிற்பாட்டுமிகை,கலப்பு வருமானம்.
(2) சம்பளங்கள், வாடகை, தேறிய வட்டி மற்றும் இலாபம்.
(3) காரணி வருமானம் மற்றும் காரணியல்லா வருமானம்
(4) நுகர்வுச் செலவினம், முதலீடு, தேறிய வரி
(5) நுகர்வுச் செலவினம், முதலீடுச் செலவினம், அரச கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதி

18) குறித்த பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதார தரவுகள் வருமாறு .


| | |
|---|---|
| மொத்த நுகர்வுச் செலவினங்கள் | = ரூபா. 6000 |
| அரச கொள்வனவுகள் | = ரூபா. 1800 |
| தேறிய ஏற்றுமதி | = ரூபா. 400 |
| சந்தைவிலை மொத்த உள்நாட்டு உற்பத்தி | = ரூபா. 9000 |

இப்பொருளாதாரத்தின் முதலீட்டின் பெறுமதி யாது?

(1) ரூபா.1200 (2) ரூபா.1000 (3) ரூபா.800 (4) ரூபா..400 (5) ரூபா.200

19) நேர்கோட்டு வடிவான நுகர்வுக் கோடு வருமாறு இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான நுகர்வு எவ்வளவு?

(1) ரூபா. 3700 (2) ரூபா. 2100
(3) ரூபா. 2000 (4) ரூபா. 1000
(5) ரூபா. 500




20) கற்பனையான பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் 0.8, வருமானம் ரூபா.5000 திலிருந்து ரூபா 6000 ஆக அதிகரிக்குமாயின் நுகர்வுச் செலவில் ஏற்படும் அதிகரிப்பு எவ்வளவு?

(1) ரூபா.400 (2) ரூபா.480 (3) ரூபா.500 (4) ரூபா.800 (5) ரூபா.1000

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

❖ 'அ' பகுதியிலிருந்து இரு வினாக்களையும் 'ஆ' பகுதியிலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 'அ'

01) (i) கீழே தரப்பட்ட கூற்றுக்களைப் பேரினப் பொருளாதார கூற்றுக்கள், சிற்றினப் பொருளாதார கூற்றுக்கள் என வகைப்படுத்துக.

(அ) ஒரு குடும்பம் வருமானத்தில் எவ்வளவு சேமிக்க வேண்டும் என தீர்மானித்தல்.

(ஆ) அதிகளவான தேசிய சேமிப்புக்கள் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க காரணமாகும்.

(இ) பண நிரம்பலுக்கும் பணவீக்க வீதத்திற்கும் இடையிலான தொடர்பு

(ஈ) ஒரு நிறுவனம் எத்தனை ஊழியர்களை வேலைக்கு அமைத்துவது என தீர்மானித்தல்.

*(4 × 1 = 04 புள்ளிகள்)*

(ii) தேசிய லொத்தர் சபையால் அதிஸ்டம் பார்க்கப்பட்ட போது உமக்கு ரூபா ஒரு மில்லியன் பரிசாக கிடைத்தது. உமக்கு இதனை தற்பொழுது செலவு செய்யவதா? அல்லது 5% வட்டிக்கு நிலையான வைப்பில் ஒரு வருடம் வைப்பிலிடுவதா? என்ற வேறுபட்ட தெரிவுகள் காணப்பட நீர் ரூபா ஒரு மில்லியனையும் தற்பொழுது செலவு செய்தால் ஏற்படும் அமையச் செலவு என்ன?

*(04 புள்ளிகள்)*

(iii) கீழே தரப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகளும் எவ்வாறு ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியில் தாக்கத்தைச் செலுத்தும் என விளக்குக.

(அ) புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு பொருளாதாரத்தில் ஏற்பட்டதன் விளைவாக மிகவும் விளைதிறன் மிக்க சூரியகல மின்சக்தியால் மின்சாரத்தின் கிடைப்பனவு அதிகரித்தது.

(ஆ) ஒரு பின்னடைவு அதிகளவு வேலையின்மையைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியது.

(இ) பொருளாதாரத்தின் தேசிய வெளியீடுகள் 40% இனால் குறைவடைந்தது.

(ஈ) பொருளாதாரத்தின் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய கல்வியல் கல்லூரிகளின் கல்வித் தரம் அதிகரித்தது. *(4 × 2 = 8 புள்ளிகள்)*

(iv) சமூகச்சந்தைப்பொருளாதாரத்தையும், சோசலிஷ சந்தைப் பொருளாதாரத்தையும் வேறுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

02) (i) நுகர்வோர் சுவையில் ஏற்படும் மாற்றம் கேள்விக் கோட்டின் வழியான அசைவையா? கேள்விக் கோட்டின் அசைவையா? ஏற்படுத்தும். விளக்குக. *(04 புள்ளிகள்)*

(ii) தொழில்முறை போக்குவரத்துச் சேவை மற்றும் சுற்றுலா துறையினருக்கான கேள்வி தொடர்பான அட்டவணை வருமாறு,

| விலை ரூபா | தொழில்முறை போக்குவரத்துக்கான கேள்வித் தொகை | சுற்றலாத் துறைக்கான கேள்வித் தொகை |
|---|---|---|
| 150 | 2100 | 1000 |
| 200 | 2000 | 800 |
| 250 | 1900 | 600 |
| 300 | 1800 | 400 |

தற்பொழுது விலை ரூபா 200 இல் இருந்து ரூபா 250 ஆக அதிகரித்தால் பின்வரும் இரண்டிற்கும் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

(அ) தொழில்முறை போக்குவரத்து

(ஆ) சுற்றலாத்துறை *(04 புள்ளிகள்)*

(iii) ஒரு நிரம்பலாளனால் நிரம்பல் செய்யப்படும் பண்டத்திற்கான நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

(iv) (அ) நிரம்பல் விதியினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நிரம்பல்கோடு மேல் நோக்கிய சரிவுடையதாக இருப்பதற்கான காரணங்கள் எவை? (02 புள்ளிகள்)

(v) குறித்த பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடு கீழ் வருமாறு


$Qd = 1000 - 20P$

$Qs = -600 + 30P$

(அ) சமநிலைவிலை மற்றும் சமநிலைத் தொகை எவ்வளவு? (02 புள்ளிகள்)

(ஆ) சமநிலையில் நுகர்வோன் மிகையை மதிப்பிடுக. (02 புள்ளிகள்)

03) (i) கீழே தரப்படும் வரைபடம் வரிக்கு முன்னரான மற்றும் வரிக்குப் பின்னரான சந்தை நிலைமையை காட்டுகின்றது.




(அ) வரிக்குப் பின்னரான உற்பத்தியாயின் மிகைப் பிரதேசம் எது? (02 புள்ளிகள்)

(ஆ) வரிக்குப் பின்னரான மொத்த மிகைப் பிரதேசம் எது? (02 புள்ளிகள்)

(ii) மேல்நோக்கிய சரிவுடைய நிரம்பல் வளையியையும் கீழ்நோக்கிய சரிவுடைய கேள்வி வளையியையும் கொண்ட நுகர்வோர் பொருள் ஒன்றிற்கு அரசு உற்பத்தியாளனுக்கு அலகு மானியம் வழங்குமாயின் நுகர்வோன் மிகை மற்றும் உற்பத்தியாளன் மிகையில் ஏற்படும் தாக்கத்தை வரைபில் காட்டுக. (04 புள்ளிகள்)

(iii) அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசு உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை விதித்தால் ஏற்படக் கூடிய பொருளாதார விளைவுகள் எவை? (04 புள்ளிகள்)

(iv) உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையையும் குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(v) கீழே தரப்படுபவற்றை வரைபில் காட்டுக.

(அ) உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலைக்கு முன் மொத்த மிகை

(ஆ) உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலைக்குப் பின் மொத்த மிகை (04 புள்ளிகள்)

## பகுதி ‘ஆ’

04) (i) உற்பத்தியுடன் தொடர்புடைய குறுங்காலம் மற்றும் நீண்ட காலத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) கணக்கியல் இலாபத்தைப் பொருளியல் இலாபத்திலிருந்து வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்றால் என்ன? இது எவ்வாறு குறுங்கால செலவு வளையின் வடிவத்தில் செல்வாக்குச் செலுத்தும்? (04 புள்ளிகள்)

(iv) பொருளியல் வாடகையையும் மாற்றல் கட்டணத்தையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(v) நான்கு காரணிகளின் அடிப்படையில் நிறைபோட்டிச் சந்தையையும் தனியுரிமைச் சந்தையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

05) (i) கீழே தரப்பட்டவற்றுள் எது தேசிய வருமான மதிப்பீட்டில் உள்ளடங்கப்படும் ஒவ்வொன்றிற்கும் காரணம் தருக.

(அ) உள்நாட்டு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம்

(ஆ) புதிய கார் ஒன்றைக் கொள்வனவு செய்தல்

(இ) ஓய்வு பெற்ற அரச ஊழியருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்

(ஈ) கல்லூரி மாணவன் ஒருவனுக்கு அவனது வீட்டால் ஒதுக்கீடு செய்யப்படும் மாதாந்த கொடுப்பனவு *(4 × 1 = 04 புள்ளிகள்)*

(ii) மறைவான பொருளாதார நடவடிக்கைகள் என்பதனை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) கீழ்வரும் பதங்களை விளக்குக.

(அ) கூட்டப்பட்ட பெறுமதி

(ஆ) மொத்த வெளியீட்டுப் பெறுமதி *(2 × 2 = 04 புள்ளிகள்)*

(iv) ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு (தரவுகள் யாவும் மில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3500 |
| • இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | 500 |
| • தேறிய ஏற்றுமதி | 400 |
| • இறக்குமதி | 200 |
| • தேறிய வரி (சந்தைக் கொடுக்கல் வாங்கலின் போது) | 200 |
| • மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 4000 |
| • அரசாங்க கொள்வனவுகள் | 1000 |
| • தேறிய முதனிலை வருமானம் | 100 |

(அ) சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி *(04 புள்ளிகள்)*

(ஆ) மொத்த ஏற்றுமதிகள் *(02 புள்ளிகள்)*

(இ) மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் *(02 புள்ளிகள்)*

06) (i) மொத்தக் கேள்வி (AD) வருமானமட்டத்தை எவ்வாறு தீர்மானிக்கின்றது என்பதனை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(ii) வருமானத்தால் தூண்டப்பட்ட நுகர்வு ,தன்னிச்சையான நுகர்வு என்பவற்றை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) சமநிலை தேசிய வருமானமானது நிறைதொழில்மட்ட தேசிய வருமான மட்டத்திற்கு சமனாக இருக்க வேண்டுமல்லதல்ல. இக்கூற்றினை விளக்குக.

(iv) ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| நுகர்வு | $(C) = 1000 + 0.8yd$ |
| முதலீட்டுச் செலவினம் | $(I) = 600$ |
| அரச கொள்வனவு | $(G) = 800$ |
| வரி | $(T) = 400$ |
| தேறிய ஏற்றுமதி | $(NX) = 540$ |
| இறக்குமதி | $(M) = 400$ |
| அரசமாற்றம் | $(TR) = 200$ |

(அ) சமநிலைத் தேசிய வருமானம் யாது? *(04 புள்ளிகள்)*

(ஆ) இப்பொருளாதாரத்தின் சேமிப்புச் சார்பைத் தருக. *(02 புள்ளிகள்)*

(இ) இப் பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கி எவ்வளவு? *(02 புள்ளிகள்)*